# திருமலை - திருப்பதி

வித்வான். ந்யாயசிரோமணி, சொல்வேந்தர், பிள்ளைலோகம்
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

நாயகனாய் நின்ற மலை :- கோயில் திருமலை பெருமாள் கோவில் என்று அடிக்கடி கூறுவதுண்டு. அதில் நடுநாயகமாய் இருப்பது திருமலை. இதனைத்திருவேங்கடமலை, சேஷாத்ரி என்று பல பெயர்களால் குறிப்பிடுவதுண்டு. பகவான் ஒரு மலையாக இருக்கிறான்; அவனைச் சிறிதும் விடாமல் தொண்டு செய்யும் திருவனந்தாழ்வான் (ஆதிசேஷன்) ஒரு மலையாக இருக்கிறான். கண்ணன் கோவர்த்தன மலையாகவே இருந்து கோவர்த்தனகிரி பூஜையை ஏற்றுக்கொண்டான். திருவனந்தாழ்வான் திருமலையாக இருந்துகொண்டு ஸ்ரீநிவாஸனைத் தாங்கிநிற்கிறான். 'வேங்கடமே வேங்கடமே' என்றாலே புண்ணியம். வேங்கட மலையைக் கண்டால் பாவம் தொலையும். அதன்மேல் ஏறிச்சென்று ஸ்ரீநிவாஸனை ஸேவித்துவிட்டால் அதுவே பிறவிப்பயன். அதனாலேயே பெரியோர்கள் திருவேங்கட யாத்திரையை முக்கிய யாத்திரையாகக் கருதினார்கள். பகவானைப் பெற்றிருக்கும் பாக்கியத்தால் திருமலை வானளாவி நிமிர்ந்து நிற்கிறது. 'நானே உயர்ந்த பொருள்' என்று தன்னை உணர்த்திக் கொண்டு ஸ்ரீநிவாஸன் அங்கு உறைகிறான். அவன் திருவுக்கும் திருவாகிய செல்வன்! பாரத நாட்டிற்கே தலைமை தாங்கி விளங்குகிறது திருமலை! அனைவரையும் அழைத்துக் காப்பாற்றுகிறது! அதுவே நாயகனாய் நின்ற மலையரையன்.

முழங்கால் முடிச்சு :- ஆழ்வார்கள் திருமலையில் ஏறவும் கூசி நின்றார்கள். திருமலையில் திருவடி படுவதையும் அபசாரமாகக் கருதினார்கள். அதனால் மலையின் அடிவாரத்திலிருந்தே திருவேங்கடமுடையானை யும் திருமலையையும் மங்களாசாஸனம் செய்துள்ளார்

கள். ஸ்ரீராமாநுஜர் (எம்பெருமானர்) ஒருவரே மலைமீது ஏறிச்சென்றுள்ளார். மூன்று முறை சென்றுள்ளார் என்று திருமலையொழுகு கூறுகிறது. திருவடிகளை மண்டியிட்டுக் கொண்டு முழங்காலால் சென்றதாகக் கூறப்படுகிறது. அது எவ்வாறுயினும் ஆகுக. ஆனல் இப்போதும் மலைமீது ஏறிச் செல்பவர்கள் (கால்நடையாகவே செல்லுகிறவர்கள்) மலையில் செங்குத்தாக ஏறும் பகுதியை முழங்கால் முடிச்சு என்றே கூறுகிறார்கள். மலைமீது வண்டிகளில் செல்லுதல் அநுசிதம் என்றே பெரியோர்கள் கூறுகின்றனர். தன்னை ஸேவிப்பதற்கு யாராவது நடந்துவந்தால் பகவான் பெரிதும் மகிழ்ந்து ஆ! ஆ! என்று அருளுகிறான் என்று பல நூல்கள் கூறுகின்றன.

வருஷ தீர்த்தம் :- ஒரு வருஷத்திற்கு 365 நாட்கள். வேங்கடாசலத்தில் சுமார் 365 தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணம் கூறுகிறது. ஆனல், அவை கண்ணுக்குப் புலப்படாத இடங்களில் இருக்கின்றன. அவற்றுள் சில தீர்த்தங்களே இப்போது பெருமையுடன் விளங்குகின்றன. பக்தர்கள் இந்தத் தீர்த்தங்களுக்குச் செல்லுகிறார்கள். வைகுண்ட தீர்த்தம், துருவ தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், இராமகிருஷ்ண தீர்த்தம், சேஷ தீர்த்தம், சக்ர தீர்த்தம், தும்புரு தீர்த்தம், ஆகாச கங்கை, பாபவிநாசம், குமார தாரை தீர்த்தம் ஆகியவை பெருமை பெற்றவை. திருமலையில் இருக்கும் புஷ்கரிணிக்கு ஸ்வாமி புஷ்கரிணி என்று பெயர். பகவானை ஸேவிக்கச் செல்லும் அனைவரும் அக்குளத்தில்தான் நீராட வேண்டும். அந்த முந்நூற்று அறுபத்தைந்து தீர்த்தங்களும், வைகுண்ட த்வாதசியன்று ஸ்வாமி புஷ்கரிணியில் ஒன்று சேருகின்றன என்பது ஐதிஹ்யம். அன்றையதினம் அக்குளத்தில் நீராடுகிறவர்கள் முந்நூற்று அறுபத்தைந்து தீர்த்தங்களிலும் நீராடிய பயன்களை பெறுவர். 365 தீர்த்தங்களையும் கொண்ட ஸ்வாமி புஷ்கரிணியை வர்ஷ தீர்த்தம் என்றும் சொல்லலாமன்றோ!

வராஹ க்ஷேத்திரம் :- வராஹப் பெருமான் கோயில் கொண்டுள்ள இடங்களுள் சில இடங்களை நமக்குத் தெரியும். திருக்கடல் மல்லை, திருவிடவெந்தை, ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இடங்களில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையை வராஹக்ஷேத்திரம் என்றே கூறுவார்கள். ஸ்வாமி புஷ்கரிணிக்கு வடகரையில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையில் உள்ள திருவேங்கடமுடையான் ஸன்னிதி முதன் முதலில் தொண்டைமான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது என்று புராணம் கூறுகிறது. ஆனால் ஸன்னிதி சிறிய அளவில் இருந்தது. அங்கு செல்லவும் வசதி இல்லாமல் இருந்தது. ஸ்ரீராமாநுஜர் திருமலைக்கு எழுந்தருளி ஸன்னி தியை விசாலமாக்கித் திருவீதிகளையும் அமைத்துத் திருவேங் கடமுடையானின் பிரம்மோத்ஸவத்தை திருமலையிலேயே நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார் என்று மிகப் பழைய வரலாறு ஒன்று கூறப்படுகிறது.

ரக்ஷகனைக் காத்த ஸம்ரக்ஷகன் :- ஒரு கால் திருமலையில் சைவ வைணவப் பூசல் தோன்றி வளர்ந்தது. ஸ்ரீமந்நாராயண னுக்குச்சில அடையாளங்கள் உண்டு. திருவாழி திருச்சங்கு, திருத்துழாய்மாலை, கௌஸ்துபம், பீதாம்பரம் ஆகியவை ஸ்ரீமந்நாராயணனைக் காட்டும் அடையாளங்களாகும். மஹா லக்ஷ்மியின் திருவுருவத்தோடு கூடிய திருமார்பை உடையவன் ஸ்ரீமந்நாராயணனே. ஸ்ரீநிவாஸன் அலர்மேல் மங்கையுறை மார்பனாக இருந்தும், சமூகவலிமையைக் கொண்டு ஸ்ரீநிவா ஸனை வேறு தெய்வமாகப் பிரசாரம் செய்து சைவர்கள் பூசல் விளைவித்தனர். அப்போது நம் இராமாநுசன் ஸ்ரீநிவாஸனிடம் சென்று 'எம்பெருமானே! திருவாழி திருச்சங்கை அணிந்து

கொண்டு, நீ ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீ நிவாஸன் என்பதைப் பூசல் வல்லார்களுக்கு உணர்த்தவேண்டும் என்று பிரார்த்தித்தார். எம்பெருமானும் அவ்வாறே செய்து பூசலை முடித்திட்டான். அதுமுதல் எம்பெருமானரை 'அப்பனுக்கு சங்காழி அளித்த தேவர்' என்று கூறுகின்றனர். ரக்ஷகனான பகவானையும் ஸம்ரக்ஷித்து, அவனைக் கொண்டு நம்மை ரக்ஷிக்கும்படி செய்திருக்கிறார் ஸ்ரீராமாநுஜர்.

நாம் எம்பெருமானை எவ்வாறு சரண் புகவேண்டும் என்பதை, நம்மாழ்வார் திருவேங்கட முடையானிடத்தில் சரணாகதியைச் செய்து காட்டி இருக்கிறார். பிராட்டியின் புருஷகாரத்தினாலேயே எம்பெருமானின் திருவருளைப் பெற முடியும் என்று அறுதியிட்டு சரணாகதி லக்ஷணத்தையும் 'புகலொன்றில்லா அடியேன்' என்பதால் ஒருவாறு வெளியிட்டுள்ளார். மநஸ்ஸாலோ, வாக்கினாலோ, சரீரத்தினாலோ சரணாகதியைச் செய்யலாம். ஆதலால் நாம்,

அகலகில்லேனிறையுமென்று அலர் மேல் மங்கையுறைமார்பா!
நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய் என்னையாள்வானே!
நிகரிலமார் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!
புகலொன்றில்லாவடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே!

திருவாய்மொழி (6-10-10)

என்று சொன்னாலே போதும் கன்றிழந்த தலைநாகு தோல் கன்றுக்கு இரங்குமாபோலே திருவேங்கடவன் இரக்கத்தோடு நம்மை அளித்துக் காப்பான்.